# ஞானக் குறவஞ்சி
## பதிப்பாசிரியர் : வீ. சொக்கலிங்கம்

**njAnak kuravanjci**
**published by: V. Chockalingam**
**In tamil script, unicode/utf-8 format**

**Acknowledgements:**
Our Sincere thanks go to the Tamil Virtual Academy for providing a scanned PDF of this work.
The e-text has been generated using Google OCR and subsequent editing and proof-reading.
We thank Mr. S. Thamizarasu for his assistance in proof-reading of the edited OCR text.
Preparation of HTML and PDF versions: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland.

**© Project Madurai, 1998-2019.**
Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet.
Details of Project Madurai are available at the website
https://www.projectmadurai.org/
You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

# ஞானக் குறவஞ்சி
# பதிப்பாசிரியர் : வீ. சொக்கலிங்கம்

**Source:**


**ஞானக் குறவஞ்சி**

பதிப்பாசிரியர் : வித்துவான் வீ . சொக்கலிங்கம்,

தமிழ்ப்பண்டிதர், (ஓய்வு), சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் "சரசுவதி மகால் நூலகம்", தஞ்சாவூர்.

வருடம்: 2002

விலை ரூ. 20-00

சரசுவதி மகால் வெளியீட்டு எண் : 440

----------

**நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு**

நூற்பெயர் : ஞானக் குறவஞ்சி

பதிப்பாசிரியர் : வீ. சொக்கலிங்கம்

வெளியிடுபவர் : இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்.

வெளியீட்டு எண் : 440

மொழி : தமிழ்

பதிப்பு : முதல் பதிப்பு

வெளியீட்டு நாள் : ஆகஸ்ட், 2002

பக்கங்கள் : 80

எழுத்து : 12 புள்ளிகள்

பொருள் : இலக்கியம்

விலை ரூ. 2000

படிகள் : 250

புத்தகக்கட்டு : மெலிந்த அட்டை

அச்சிட்டோர் : சரசுவதி மகால் அச்சகம்


------------

## வெளியிடுவோர் முகவுரை

ஞானக் குறவஞ்சி என்னும் இந்நூலில் குறவஞ்சி நடையில் ஞானத்தினை எளிமையாகக் கூறுவது. "குறவஞ்சி" என்பது “குறத்திப்பாட்டு" அல்லது குறம் எனும் பெயர் பெறும். குருவ நாடகம் என்பதும் இவ்வகையினைச் சார்ந்ததே. இது 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. பெரும்பான்மை நாடக வடிவில் அமையப் பெற்றது. கடவுளையோ, அரசரையோ, வள்ளரையோ, செல்வரையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்படுவது.

இந்நூலின் பதிப்பாசிரியர் திரு வீ. சொக்கலிங்கம் என்பவர். இந்நூல் பருவ இதழ் வாயிலாக வெளிவரப்பெற்று, தற்பொழுது முதற் பதிப்புப் புத்தகமாக வெளிவந்துள்ளது.

இந்நூல் வெளிவர ஆவன செய்துள்ள நூலக நிருவாக அலுவலர் திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், நூலக வெளியீட்டு மேலாளர் திரு. அ. பஞ்சநாதன் அவர்களுக்கும், இந்நூலை நன்முறையில் அச்சிட்டுத்தந்த நூலக அச்சகப் பணியாளர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

சரசுவதி மகால் நூலகம். சி. கோசலராமன், இ. ஆ. ப.,
தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் இயக்குநர்,
17-7-2002

-----

## வேண்டுகோள்

கருணையுள்ளம் கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை, பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்கு முன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும். மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர். மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்,
15-5-2002. சரசுவதி மகால் நூலகம்.

---------

## முன்னுரை

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா
(ஆ)றங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்.

என்பது திருவிளையாடற்புராணம். ஞானமே வடிவான கடவுள் கல்லால மரத்தின் கீழிருந்து சனகாதி நால்வருக்கும், நான்கு மறை, ஆறு அங்கங்கள் முதலான எல்லாவற்றையும், திருவாய் மலர்ந்தருளுதலின்றித் தன் திருக்கர மாத்திரச் சின்முத்திரை என்னும் அடையாளங்காட்டியே உணர்த்த, அது கொண்டு அவர்களும் அனைத்தும் உணர்ந்தனர்.

அவ்வாறு பெறுவோர் தலைசிறந்த மாணாக்கராவர். தலை, இடை, கடை மாணாக்கர் என்பது போல மக்களும், கொளுத்தப் பற்றும் கற்பூர அறிவுடையார் என்றும், சற்று முயன்று பற்றவைக்கப் பற்றும் கரி அறிவுடையார் என்றும், எவ்வளவு முயன்றும் பற்றாத கதலி (வாழைத்தண்டு) அறிவுடையார் என்றும் முத்தரத்தினராவர். எத்தரத்தினருக்கும் பயன் தருமாறு எழுந்ததே இந்த 'ஞானக்குறவஞ்சி'.

குறவஞ்சி நடையில் ஞானத்தினை எளிமையாகக் கூறுவது 'ஞானக் குறவஞ்சி' யாகும். இது எமது மகால் சுவடி எண். 821ஐக் கொண்டது. மூன்று பகுதிகளை உடையது. ஆசிரியர் பெயர் தெளிவாகக் கிடைக்கப்பெறவில்லை என்றாலும், முதலிரண்டு பகுதிகளை இயற்றியவர் 'குமரகுருபரன்' என்று ஒருவாறு தெரிகின்றது. மூன்றாம் பகுதி 'பீருமுகம்மது' என்பவராற் செய்யப்பட்டது. எளிய நடையில் உள்ள இது ஒரு பெருந் தத்துவ நூல். நல்ல பயனைத் தருவது.

'குறவஞ்சி' என்பது 'குறத்திப்பாட்டு' அல்லது 'குறம்' எனப் பெயர் பெறும். 'குளுவ நாடகம்' என்பதும் இவ்வகையினைச் சார்ந்ததே. இது தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களுள் ஒன்று. பெரும்பான்மை நாடக வடிவில் அமையப்பெற்றது. கடவுளையோ, அரசரையோ, வள்ளலையோ, செல்வரையோ, பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்படுவது.

தலைவன் உலாவருதல், தலைவி காமுறுதல், காமநோய்கொடு வாடுதல். தூதுவிடுத்தல், குறத்தி வருதல், குறி பகர்தல், குறவன் வருதல், குறவன் குறத்தி வாதிடுதல் முதலானவைகள் அமையப்பாடுவதாகும்.

இந்த 'ஞானக்குறவஞ்சி'யில் மேற்கூறிய தலைவன் உலாவரல் முதலானவைகள் இன்றிக் குறவன் வருகை, குறவன் தன் பெருமை கூறுதல், திருமலைச் சிறப்புக் கூறுதல், குறத்தி வருகை, குறவன் குறத்தி வாதிடுதல், குறவன் பறவை வரவு கூறுதல், அமைதி வேண்டல், மெஞ்ஞானப்புள் போகாதிருத்தல், கண்ணி கொண்டுவருதல், கண்ணிகளைத் திருத்திவைத்தல், குறவன் ஞானப்புள்ளைப் பிடித்தல், வாழ்த்து ஆகிய தலைப்புகளுடன் முதற்பகுதி முடிவுறுகின்றது.

இரண்டாம் பகுதியில் குறவன் தோற்றம், குறவன் தன் சொந்தமலை கூறுதல். சிவபட்சி வருவதைக் கூறுதல், அமைதி வேண்டல், சிவபட்சிகளைச் சுற்றி வளைத்தல், அவைகள் போகாமற் காத்தல், அவைகள் இரைமேய்தல், கண்ணி கொண்டுவருதல், சிவ பட்சிகளைப் பிடித்தல், வாழ்த்து ஆகிய உறுப்புகள் கூறப்பட்டுள்ளன.

மூன்றாம் பகுதியில் சிங்கன் சிங்கி தருக்கம் என்னும் உரையாடல் போன்ற வினாவிடை கொண்டு வாதிடுதல் மட்டுமே கூறப்பட்டுள்ளது.

முதற்பகுதியில் ஞானத்தினைப் பற்றுதல் போலவும், இரண்டாம் பகுதியில் சிவத்தினைப் பற்றுதல் போலவும், மூன்றாம் பகுதியில் வினாவிடை வாயிலாகத் தத்துவங்களைப் பற்றுதல் போலவும் கூறப்பட்டுள்ளன.

மருத்துவத்தினை மனதில் பதியவைத்தற்பொருட்டு எளிய நடையில் வைத்தியக்கும்மி, வைத்தியக் குறவஞ்சி முதலான நூல்கள் எழுந்தனபோல, ஞானம் பெற ஞானக்கும்மி. ஞானக்குறவஞ்சி. மெஞ்ஞானக்குறவஞ்சி, ஞானரெத்தினக்குறவஞ்சி, தத்துவக் குறவஞ்சி, வேதாந்தக் குறம் முதலான பல நூல்கள் எழுந்தன. எளிய நடையேயாயினும் தத்துவக் கருத்துக்களை உள்ளடக்கிக் கூறியுள்ள விடங்களில் உருவகம் தந்து கூறியுள்ளார்.

'திருமலைச் சிறப்பு’க் கூறும் தலைப்பில் 'கந்தன் எங்கோன் திருமலை மகிமை சொல்வேன்' என்கிறார் முதற்றொகுதியில், 'திருமலை' என்பது திருப்பதி (வேங்கடமலை)யினைக் குறிக்கும் என்பது உணரற்பாற்று, தற்போது ' திருமலை திருப்பதி' என வழங்கப்படுகின்றது, வடவேங்கடம், வடவேங்கடமுடையானைக் கந்தக் கடவுள் என்பர் ஒரு சாரார்.

**இனிக்குறவஞ்சி வரிசையில் பல குறவஞ்சிகள் உள்ளன அவற்றுள் சில:**

| **எண்.** | **குறவஞ்சியின் பெயர்** | **ஆசிரியர் பெயர்** |
|---|---|---|
| 1. | அமரவிடங்கன் குறவஞ்சி | ? |
| 2. | அர்த்தநாரீசர் குறவஞ்சி | ? |
| 3. | அலகுமலைக் குறவஞ்சி | ? |
| 4. | அழகர் குறவஞ்சி | கவிகுஞ்சர பாரதியார் |
| 5. | அனலைத்தீவுக் குறவஞ்சி | முத்துக்குமாரப்புலவர் |
| 6. | ஆதிமூலேசர் குறவஞ்சி | தில்லைவிடங்கன் மாரிமுத்தாபிள்ளை |

| | | |
|---|---|---|
| 7. | இராசமோகனக் குறவஞ்சி | கிரிராசக்கவி |
| 8. | இராமபத்திர மூப்பனார் குறவஞ்சி | க. சுப்பராமய்யர் |
| 9. | கச்சாய்க் குறவஞ்சி | மாப்பாண முதலியார் |
| 10. | கச்சேரி முதலியார் குறவஞ்சி | இன்பக்கவி |
| 11. | கண்ணப்பர் குறவஞ்சி | ? |
| 12. | கதிரை மலைக் குறவஞ்சி | விநாயகப்புலவர் (சுதுமலை) |
| 13. | கபாலீச்சுரர் குறவஞ்சி | ? |
| 14. | காங்கேயன் குறவஞ்சி | ? |
| 15. | காயாரோகணக் குறவஞ்சி | அழகுமுத்துப்புலவர் |
| 16. | காரைக் குறவஞ்சி | மே. சுப்பையர் |
| 17. | குமாரலிங்கக் குறவஞ்சி | ? |
| 18. | கும்பேசக் குறவஞ்சி | பாவநாசமுதலியார் |
| 19. | குறவஞ்சி (தெலுங்கில்) | ? |
| 20. | குன்றக்குடிக் குறவஞ்சி | வீரபத்திரக்கவிராயர் |
| 21. | கொங்கர் குறவஞ்சி | சா. தூ. சு. சோசி |
| 22. | கொடுமளூர்க் குறவஞ்சி | முதுகுளத்தூர் நல்ல வீரப்பப் பிள்ளை |
| 23. | கொடுமுடிக் குறவஞ்சி | ? |
| 24. | கோமாசிக் குறவஞ்சி | ? |
| 25. | சகசிராசன் குறவஞ்சி | முத்துக்கவி |
| 26. | சந்திரசேகரக் குறவஞ்சி | ? |
| 27. | சரபேந்திரபூபால குறவஞ்சி | கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் |
| 28. | சாப்டூர் குறவஞ்சி | நகரம் முத்துசாமிக் கவிராயர் |
| 29. | சிதம்பரக் குறவஞ்சி | செல்லப்பப்பிள்ளை |
| 30. | சிதம்பரக் குறவஞ்சி | ? |
| 31. | சிவபெருமான் குறவஞ்சி | தாமோதரக் கவிராயர் |
| 32. | சிவன்மலைக் குறவஞ்சி | தே. லெட்சுமண பாரதியார் |
| 33. | சிற்றம்பலக் குறவஞ்சி | கே. என். தண்டபாணிப்பிள்ளை |
| 34. | சுவாமிமலை முருகன் குறவஞ்சி | இலிங்கப்பையர் |
| 35. | செந்தில் குறவஞ்சி | ? |
| 36. | சேற்றூர் முத்துசாமித்துரைக் குறவஞ்சி | இராமசாமிக் கவிராயர் |
| 37. | சோழக் குறவஞ்சி | கம்பர் |
| 38. | ஞானக் குறவஞ்சி | குமரகுருபரர் |
| 39. | ஞான ரெத்தினக் குறவஞ்சி | பீருமுகம்மது |

| | | |
|---|---|---|
| 40. | டெல்லிக்குறவஞ்சி | டெல்லித் தமிழ்ச்சங்கம் |
| 41. | தஞ்சைக் குறவஞ்சி | சென்னை கேசரி அச்சகம் |
| 42. | தஞ்சை வெள்ளைப்பிள்ளையார் குறவஞ்சி | ? |
| 43. | தத்துவக்குறவஞ்சி | முருகேசபண்டிதர் |
| 44. | தமிழாசிக் குறவஞ்சி | புலவரேறு அ. வரதநஞ்சைய பிள்ளை |
| 45. | திருக்குற்றாலக் குறவஞ்சி | திரிகூட ராசப்பக் கவிராயர் |
| 46. | திருச்செங்கோட்டுக் குறவஞ்சி | ? |
| 47. | திருப்பாகையூர்க் குறவஞ்சி | ? |
| 48. | திருப்போரூர்க் குறவஞ்சி | புரசை. அட்டாவதானம் சபாபதி முதலியார் |
| 49. | திருமணக் குறவஞ்சி | ஆ. சுப்பிரமணிக் கவிராயர் |
| 50. | திருமலையாண்டவர் குறவஞ்சி | ? |
| 51. | திருவாரூர் தியாகராசர் குறவஞ்சி | முத்துக்கவி |
| 52. | திருவிடைக்கழிக் குறவஞ்சி | மீனாட்சி சுந்தரம்பிள்ளை |
| 53. | துரோபதைக் குறவஞ்சி | ? |
| 54. | தேவேந்திரக் குறவஞ்சி | தஞ்சை சரபோஜி மன்னர் |
| 55. | நகுலமலைக் குறவஞ்சி | சேனாதிராய முதலியார் |
| 56. | நகுலமலைக் குறவஞ்சி | விசுவநாத சாத்திரியார் |
| 57. | நல்லைக் குறவஞ்சி | சேனாதிராய முதலியார் |
| 58. | நல்லை நகர்க் குறவஞ்சி | யாழ்ப்பாணம் ப. கந்தப்பிள்ளை |
| 59. | நவபாரதக் குறவஞ்சி | பாலபாரதி சது. சு. யோகியார் |
| 60. | நவபாரதக் குறவஞ்சி | அனைத்திந்திய வானொலி நிலையம் |
| 61. | நெல்லைக் குறவஞ்சி | தொண்டைமான் முத்தையா |
| 62. | பழனிக் குறவஞ்சி | வே. முத்தனாச்சாரியார் |
| 63. | பாண்டிக் கொடுமுடிக் குறவஞ்சி | ? |
| 64. | பாம்பண்ணக் கவுண்டர் குறவஞ்சி | அருணாசலக் கவிராயர் |
| 65. | பிலிப்பு விராட்ரிக்கோ முத்துக்கிருட்டினன் குறவஞ்சி | இன்பக்கவி |
| 66. | பிரகதீசுவரர் குறவஞ்சி | சிவக்கொழுந்து தேசிகர் |
| 67. | பெத்லெகேம் குறவஞ்சி | தஞ்சை வேதநாயக சாஸ்திரியார் |
| 68. | பெம்பண்ணக் கவுண்டர் குறவஞ்சி | பாலபாரதி முத்துசாமி ஐயர் |
| 69. | பொங்கலூர்க் குறவஞ்சி | பிரமயனப் புலவர் |
| 70. | பொய்யாமொழியீசர் குறவஞ்சி | சிதம்பர தத்துவலிங்கையர் |
| 71. | மண்ணிப்படிக்கரை | |

| | | |
|---|---|---|
| | திருநீலகண்டர் குறவஞ்சி | சாமிநாதய்யர் |
| 72. | மருங்காபுரிச் சிற்றரசர் குறவஞ்சி | வெறிமங்கையாகக் கவிராயர் |
| 73. | மருதப்பக் குறவஞ்சி | பிலிப்பு தெ. மெல்லோ |
| 74. | மல்வில் குறவஞ்சி | வெற்றிவேலுப் புலவர் |
| 75. | மாந்தைக் குறவஞ்சி | வீரபத்திரக் கவிராயர் |
| 76. | முத்தானந்தர் குறவஞ்சி | ஆற்றூர் முத்தானந்தர் |
| 77. | முத்துசாமித்துரைக் குறவஞ்சி | முகவூர் கந்தசாமிக் கவிராயர் |
| 78, | முருகக்கடவுள் குறவஞ்சி | இலிங்கப்பையர் |
| 79. | முருகர் குறவஞ்சி | நல்லவிரப்பப்பிள்ளை |
| 80. | மெய்ஞ்ஞானக் குறவஞ்சி | முகம்மது. |
| 81. | யாழ்ப்பாணத்துச் செல்வர் குறவஞ்சி | இன்பக்கவிப் புலவர் |
| 82. | வண்ணைக் குறவஞ்சி | விசுவநாத சாத்திரியார் |
| 83. | வண்ணை வைத்தியலிங்கக் குறவஞ்சி | கணபதி ஐயர் |
| 84. | வருணபுரி ஆதிமுலேசர் குறவஞ்சி | தில்லைவிடங்கன் மாரிமுத்துப் பிள்ளை |
| 85. | வள்ளிக் குறவஞ்சி | ? |
| 86. | வள்ளியம்மன் ஆயலோட்டக் குறவஞ்சி | கந்தசாமி முதலியார் |
| 87. | வன்னிக் குறவஞ்சி | வெற்றிவேலுப் புலவர் |
| 88. | வாதசெயக் குறவஞ்சி | ? |
| 89. | விராலிமலைக் குறவஞ்சி | ? |
| 80. | வெங்களப்ப நாயக்கர் குறவஞ்சி | மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக்கவிராயர் |
| 91. | வேங்கடசாமி நாயக்கர் குறவஞ்சி | மாம்பழக் கவிச்சிங்க நாவலர் |
| 92. | வைணவக் குறவஞ்சி | முருகேச ராமானுச ஏகாங்கிச் சுவாமிகள் |
| 93. | வைத்தியக் குறவஞ்சி | கொங்கணர் |
| 94. | வையாபுரிக் குறவஞ்சி | ? |

---------

**குறம்**

| | | |
|---|---|---|
| 95. | அண்டவெளிக்குளம் | ? |
| 96. | அம்பலக் குறம் | தொழுவூர் வேலாயுத முதலியார் |
| 97. | இலக்கணையர் குறம் | ? |
| 98. | சொர்க்கக் குறம் | பிறையாறு மீரான்கனி அண்ணாவியார் |
| 99. | திருக்குருகூர் மகிழ்மாறன் பவானிக்குறம் | ? |

| | | |
|---|---|---|
| 100. | நெல்லைநாயகர் குயம் | தொண்டைமான் முத்தையா |
| 101. | பிசுமில் குறம் | பீருமுகம்மது சாகிப் |
| 102. | மதுரை மீனாட்சியம்மை குறம் | குமரகுருபர சுவாமிகள் |
| 103. | மாது குறம் | மீரான் கனியண்ணாவியார் |
| 104. | மின்னொளியாள் குறம் | புகழேந்திப் புலவர் |
| 105. | விதுரர் குறம் | புகழேந்திப் புலவர் |
| 106. | வித்துவான் குறம் | புகழேந்திப் புலவர் |
| 107. | வேதபுரீசர் குறம் | ? |
| 108. | வேதாந்தக் குறம் | வெங்கடேச குருதாசர் |

------------------------------

மேற்கண்ட குறவஞ்சிகளுள் சிலவற்றில் ஞானமும் தத்துவங்களும் வேதாந்தங்களும் பேசப்படுகின்றன.

இந்நூல் மிகவும் சிதைந்தும் முறிந்தும் காணப்படுகின்றது. 42 ஏடுகளைக் கொண்டது. இதனை ஆய்ந்து வெளியிடப் பரம்பொருளின் திருவருள் துணை செய்தமைக்கு வாழ்த்தி வணங்குகின்றேன். இந்நூலினை வெளியிட அனுமதியளித்த எமது மகால் கௌரவக் காரியதரிசி திருமிகு வித்துவான் அ. வடிவேலன் அவர்கட்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இந்நூலில் அறியாமையினால் ஏற்பட்ட பிழைகள் இருப்பின் அதனைப் பொருத்தருள வேண்டுவதோடு, அவைகள் திருத்தம் பெறவும் உதவ வேண்டுமெனக் கற்றுவல்ல புலவர்களை வணங்கிக் கேட்டுக்கொள்ளுகின்றேன். இப்பணி இனிது நிறைவெய்தக் கலைமகளின் திருப்பாதங்களைச் சிரமேற் கொள்ளுகின்றேன்.

வாழ்க தமிழ்; வளர்க மெய்ஞ்ஞானம்.

இங்ஙனம்,

தஞ்சாவூர், வித்துவான் வீ. சொக்கலிங்கம்,

14-10-74. சரசுவதி மகால் நூலகம்,

------------------------------

## ஞானக் குறவஞ்சி [#]

[#] எமது சரசுவதி மகால் சுவடி எண். 821

### காப்பு

சீரில் வரும் வளர்ந்தோங்கும் [1] திருப்புகழ்க்கு
விருப்ப (மளித்துப் பர)வும்
தாரில்வரு கடம்புபுனை சண்முக
சிகாமணிமேல்த் (திகழு ஞானத்)
(தேரில் வரும் குறவஞ்சி மதுரமொழி
வித்தாரம் (எனுஞ்சீர் பாடக்)
(காரில் வரும் ) கற்பகத்துக் கணபதி பொற்
சரணமலர் கருத்தில் வைப்பாம். 1

------

[1] வழந்தோங்கும் என்றுளது.

(பரிபுவனம்) தங்கு புகழ் பெருகுமணி
மந்திர அபி சேகம் விளங்கும்
(அரிபிரமன்) தேடரிய அம்பலவர்க்
கருள்புரிந்த ஆதி வித்தாம்
(கிரிபரவுந் திருக்) குமர சரவணக்
குறவஞ்சி பேச நாளும்
திரிபுரையம் பிகையீன்ற (குமரேசன் )
திருத்தாளே சென்னி சேர்ப்பாம். 2

வேறு

போற்றியடி பணிந்து(ன்னை வணங்குவோர்க்)குப்
புகழ்பெருகும் அருள் பெருகும் புண்ணிய முண்டாம்
ஆற்றரிய ( தவவ)லியால் ஞான முண்டாம்
அனவரத மழியாத பொருளு முண்டாம்
(வீற்றிருக்குந்) திருக்காட்சி யருளுண் டாகும்
வளஞ்சேரும் வினை தீரும். (மார்க்க முண்டாம்)
வேற்றுருவங் காயசித்தி விளைவுண் டாகும்
வேதாந்த சாயு(ச்சியம் விளம்)பும் நூலே! 3

### கலித்துறை

வாக்கு மனதுக்கு மெட்டாப் பொரு(ளை) மவுன மூர்த்(தி)

தாக்கும் படிக்கருள் தான் புரிந் தோன்சர்வ லோகமெல்லாங்
(காக்)குங் (குருக்களுஞ் ) சொன்ன (விற் பாதங்) கருத்திலுறச்
சேர்க்கும் அடியவர்க் கென்று(ங் கொடுக்)குஞ் சிவபாதமே! 4

ஆற்றுரு சித்திக்கோ ராதார மாக வருள் (றிவாற் )
பாற்றுவைத் தாண்ட பரிமே லழகா பதிபகவும்
சேர்த்துப் பின் பாசமு தாளும் திருமலர் தானறுத்துப்
பூத்த மலரின் மணம் போ(ற் பொலியுமென்) றோதினரே! 5

**விருத்தம்**

சீர்கொண்ட பலவகை யாதி பருமென்
(சி)வபூசை குருபூசை திருந்தச் செய்வோன்
பார்கொண்ட யிளசைந(கர் நாட்டின் மிக்க)
(பாச)வருள் வளஞ் சிறந்து பசுவும் மேவும்
நீர் கொண்ட செஞ்(சடையோன் திருத்தாள்) போற்றும்
நித்த பரிமேலழகர் நிறைந்த ஞானக்
கூர்கொண்(ட குமரகுரு) பற்றுஞ் செந்தூர்க்
குமரன்மேல்க் குறவஞ்சி கூறினானே ! 6

**வேறு**

(முற்று)யர் மூல மாறில் முழுமுதற் கடவுளாகிச்
சத்தியாய்ச் சிவமு மாகிச் சருவமும் தானே யாகி
நித்திய பூரணமு மாகி நேசமாம் பாச மாகி
வத்து (வாய் விளங்கி யா)டும் மலரடி போற்றி போற்றி! 7

**குறவன் வருகை**

**விருத்தம்**

கண்டதே காட்சி யாகிக் (காரணப் பொருளாய் வ)ந்து
அண்ட பிண் டங்க ளெங்கும் ஆதியா யனாதி யாகிக்
கொண்ட (பி னழி)யா ஞானக் கொழுந்துவிட் டோங்கா நின்ற
மண்டலம் வ(ளஞ்சேர் விந்தைக்) குறவனும் தோன்றி னானே ! 8

**குறவன் தன் பெருமை கூறல்**

இந்திர தருப்போல் நாளும் எனக்கருள் (குரு) வாய் வந்து

சுந்தரலிங்க மான சோதியாம் செந்தூர்க் கந்த(ன்)
அந்தர(த் தமரர்) போற்றும் அகாரமே உகார மான
மந்திர மூ(லஞ் சேர்ந்த) மலையெந் (தன் கா)ரணி யையே ! 9

**வேறு**

சரியையாங் கச்சைகட்டி யருள் நீ ரிட்டுத்
தற்பணம் போல் திலதமிட்டுத் தாண்டாய்[2] நின்ற
கிரியையா(ய்ப்) பல (வரையுங் குன்றி) மாலைக்
கிருபையெனுங் கொக்கிற்கு முடியிற் சூடி
அரியசிவ (யோகமெ)னுங் கண்ணி தன்னை
அங்கெனவே தூக்கியசை யாமல் கொண்டு
(பெரிய)தொரு மெஞ்ஞானப் புள்ள(து) தன்னை
உண்மைநின வ(றிவாற்றேடிப் பிடிப்ப) னையே! 10

**வேறு**

கார ணக்குரு வாகியே வந்து
கமல பாதமு (முடிமீ)தி (லங்க)
(ஆரண) நாலு சாத்திர மாறுடன்
தத்துவ மாறு மாதார மாறும்
பூ(ரண மாகிய வைம்பத்தோ) ரட்சரம்
புத்தி வித்தார மாய்ப் போதித்த
(நாரணன் வணங்குஞ் ) செ(ந்தூ)ரில் வாழ்
நாகரீகக் குறவனும் நானே! 11

வாதி சாலோ(க பு)ஷ்ப மணக்(கு)ம்
(வீ)ழறு (சா)மீப கெந்த மணக்கும்
நீதி சாருப தீப மணக்கும்
நி(றைந்த சாயுச்)சிய (மோட்)சம் மணக்கும்
சாதி ஞானக் கொழுந்து மணக்கும்
தருக்(கு செவ்வந்)தி யெங்கும் மணக்கும்
சோதி மாமணி மேவுசெந்தூரில் வாழ்
(சு)ருதி (நான்மறைக்) குறவனும் நானே! 12

ஆரண (மா)முக சாலை சி(றக்கும்)
அந்தணர் வேள்விச் சோலை[3] சி(றக்கும்)
(தோர)ணம்ப(தி) தோறுஞ் சிறக்கும்
கண்காட்சி தேர் மிசை யாட்சி சிற(க்கும்)

பூரண கும்பம் முன்றில் சிறக்கும்
பொற்பத சேவை(யா)ஞ் சோதி சிறக்கும்
தோரணத் திருவாசல் சிறக்குஞ் (செந்தூர்)
(துளங்கு ஞான)க் குறவனும் நானே! 13

---

[2] - ?

[3] சாலை எனில் அமையும்

வண்டு கிண்டிய தொங்கலும் (புட்)ப
(வாச மலிந்த மாலையும்) மணக்கும்
கண்ட காட்சி களபகஸ் தூரி
காரணத் (தோடனு தினமும் மணக்கும்)
பண்டு மாலயன்[4] தேடரி தாகிய
பாத மாமலர் (சென்னி சேர்த்திடும்)
(தொண்)ட ருள்ளம் நிறைந்த செந்தூரில் வாழ்
கருதி நாட்(டுக்) குறவனும் நானே! 14

---

[4] மாலையன் என்றுளது

ஆர ழகுமுகத் (தைத்து திப்பேன்
அரியெனு மட்சர மு (ச்ச ரிப்பேன்)
(கூ)றும் போதெலாம் ஆறெழுத் தோதியே
கும்பிட் டே (திரு வெண்ணீறு பூசுவே)ன்
(வீறு)ள் ளமயில் தன்னையும் வாழ்த்தியே
வேலை நாளும் (வணங்கி யிருப்பே)ன்
ஆறு பூங்கடப் பந்தார் புனைந்திடும்
ஞான மூர்த்தி யடுமையும் (நானே !) 15

(உண்)மையாய் மூலம் நாலு மலையும்
ஒற்றைக் கொம்பனவன் காணியாக் கொண்டான்)
(தண்மை) சேர் சுவாதிட் டான மாறும்
தன்மலை யாய்விரிஞ் சன்னகை (க் கொண்)டான்
வண்மை யாய்மணி பூரகம் பத்தும்
வழ(ங்கு) மா (லவன் வலிதிற் கொண்டான்)
பண்ண மைந்த அனாகத ருத்திரன்
பன்னிரண்டு ம(லையுங்) கா(ணே!) 16

(எண்)ணியின் னங்கொள் பதினாறு மலையும்

இயலமயே சுரன் றன் (விசுத்திய தாகும்)
வண் ண (மா)டத்தி லாக்கினை யான
மலைகள் ரண்டு சதா (சிவன் காணி)
(கண்ணி)ய மாயெனை யாண்ட சற்குரு
நாத னார்க்கொரு மலைபாரிக்கும்
(பெண்ணு ட)ன் வளர்ந் தோங்கி நின்ற
பராபர(ன்) மலையென் காணி யையே ! 17

**குறவன் திருமலைச் சிறப்புக் கூறுதல்**

சந்திரன் மலையும் அல்ல சமைந்ததோர் மலையும் அல்ல
விஞ்சைசேர் மலையும் அல்ல வெள்ளிமால் வரையும் அல்ல
அந்தர மலையாய்த் தோன்றி (அள)வற்ற பிரமத் துண்மை
செந்தில்வாழ் கந்த னெங்கோன் திருமலை மகிமை சொல்வேன்! 18

**தரு**

(இந்)து சேகரா னந்த மண்டபத் திருக்குமாந் திருமலையே!
ஏறி ஏறியே இடைபிங் கலையில் தங்குமாந் திருமலையே!
சந்திரா தித்தன் விந்து (நாதமு)ந் தங்கிய திருமலையே!
தானென்ற போதகம் போக்கி யேயருள் தங்(கிடுந் திருமலை)யே!
பந்தி பந்தியாய் வந்து வானவர் பணிந்திடுந் திருமலையே!
............ ..... ..... ...... திருமலையே!
கந்த(மூ லாதி) பதார்த்த முங்கமழ் வாசமாந் திருமலையே!
....... ..... ........ ....... திருமலையே !
ஈர்க்கம் (பெட்டியில் வெள்ளைச் சர்ப்)பம் போலிருக்குமாந் திருமலையே!
இருநாழி நெல்கொண்டு (என்றென்றும் தாயாய்)
ரட்சிக்குந் திருமலையே!

பார்க்கப் பார்க்கச் செவிகண் மூக்கிடை அ(வைய)னலாந் திருமலையே!
பஞ்ச வர்ணமாய் அஞ்சு பூதமாய் விஞ்சைசே (ருந்) திருமலையே !

சாத்திரப் பட்சி சூத்திர மாகப் பார்த்திடுந் திருமலையே !
........ ...... ...... ..... ...... திருமலையே !

ஏத்திச்சே விக்குஞ் (சுத்தர்க்குக்) கொழுந்து விட்டொளிருந் திருமலையே !
ஏக போகமாய் இன்ப (மானசி)வ யோகமாந் திருமலையே!

சக்தி லேசத் சத்து மேவி(யே) தானாகுந் திருமலையே!

(தா)வி(யே தனுகரண) புவன போகங்கள் காட்சிக்குந் திருமலையே !

சித்தி லேசிவ மான மெய்ப்பொருள் திகழ்(ந்தி)டுந் திருமலையே !
திருப்புக ழதனை விருப்ப மாகவே திகட்டிடுந் திருமலையே !

அஞ்சிலொன் றாறாய் அநாதி யாகவே ஆடிடுந் திருமலையே !
அஞ்சு பூதமும் ஆறு சமையமும் அமருந் திருமலையே !

பஞ்ச இந்திரியக் கொடிக ளோடியே படர்ந்திடுந் திருமலையே !
பஞ்சாட்ச ரப்பூவும் தாயு மாகவே பழுத்திடுந் ( திருமலையே!)

நெஞ்சி லே நினை வாகத் தோன்றியே நிலைபெறுந் திருமலையே !
நிர்மல மாகிச் சின்மய (மாகித்) தேர்ந்திடுந் திருமலையே !

இன்சொல் லியாவும் இரக்கமு மன்பும் இணங்கிடுந் திருமலையே !
இலகு போரொ(ளி) யாகவே நின்று துலங்கிடுந் திருமலை யே!

பாச மாய்ப்பசு வாகி யேபதி மேவிடுந் திருமலை யே!
பாரிலே கு(மர) ஞான தேசிகன் பகர்ந்திடுந் திருமலையே !

வாச மாயடி நடுமுடி வாகி வணங்கிடுந் திருமலையே !
........ ........ ........... ...................... திருமலையே !

(ஆசா பா)சங்கள் நீக்கி யே தடுத்தாட்கொளுந் திருமலையே !
அப்பர் சுந்தரர் ஞான சம்பந்தர் அருள்பெறுந் திருமலையே !

பேசப் பேசவே இன்ப துன்ப(ப்) பிணக்கறுந் திருமலையே !
பேரின்ப முத்திக் கேது வாகியே பேரருள்(தருந் ) திருமலையே! 19

### குறத்தி வருகை

#### விருத்தம்

சாத்திரம் வேதம் கல்வி சமயங்கள் தத்து வங்கள்
பாத்திடுங் கணித சிற்பம் பஞ்சாங்கம் (இராச) யோகம்
சூத்திரம் கலைக்கி யானம் சொல்லுங்கா வியங்க ளெல்லாம்
கோத்துமெய்[5] யணிந்த புத்திக் (குறத்தி)யுந் தோன்றி னாளே !, 20

----

[5] கொத்துமை என்றுளது.

**குறவன் குறத்தி தருக்கம்**

**சிந்து**

இத்தனை நேரமுந் தேடினே னுன்னை
எங்கே நீ போய்வந்தாய் - (குறத்தி) !
புத்தியருள் சுத்தனைச் சூரசங் காரனை
நித்தந் தொழப்போனேன் - குறவா!

எத்தனை கற்றாலும் எத்தவஞ் செய்தாலும்
எந்தவேள்வி முடித்தாலும் - அந்த
நித்தனைப் பூசித்து திட்டை செய் தாலல்லோ
சித்திமுத்தி பத்தியுண்டாம் - குறவா !

சிந்துரத் துக்கிளை யோன் தெய்வ குஞ்சரி
தெய்வவள்ளிக் குமணாளன் - சிவ
கந்தசு வாமியைப் பாடி வாழ்த்திக்
கண்(டுகன)கம் பெற்றுவந்தேன் - குறவா !

முந்து (ற்ற) நந்தூர் செந்தூர் மேவிய
முதல்வனையென் னாளும் வாழ்த்தியே - நல்ல
சிந்தா மணிமுத்து யெனதா(சை தீ)ரவே
(தீர்)க்காயி சும்பெற்றேன் - குறவா!

மேலத் தெருவீதி தனிலிருந்து வி(ளை)யா(டும் )
பச்சைப் பசும்பொ(ன்னை - வெளி)
மூலை முடக்கினில் சோதியைச் சந்தித்தால்
(மேதினியாளல்) தப்பா(தோ)டி- குறத்தி !

சோலையும் பொய்கையும் பூங்கா வனங்களும்
(துடர்கின்ற) தலத்தினில் - அந்த
காலைப் பிடிக்கத் தலையான காரியம்
கைமேல் (பலி)த்திடு (ம்) - குறவா!

காலைப் பிடிக்கத் தலையான காரியம்.
கைமேல் பலித்ததுண்டானால்- சுடர்
வேலைப் பிடித்து மயில்வருஞ் சோதியை
வீதியிற் கா(ணலா)ங் - குறவா!

அந்தவி தஞ்சொன்ன ஆயிழை யாளே
அன்னமே தேனே குயிலே - இனி
எந்த விதமாகக் காலைப் பிடிப்பது
எனக்கறியச் சொல்லு - குறத்தி !

யாங்குடன் பத்மா சனத்தி லிருந்து
பல் சிந்தனை விட்டுப் பார்க்கில் – அரி
ஓமென்ற பே(ரொளி} மேலுச்ச ரிப்பதை
உற்றுப்பார்த் தாலறிவாய் - குறவா!

உற்றுப் பார்க்கி (லோர்பா) ஒளி சிறந்
தோங் (கியே தோன்றிடும் ) - (சிவப்)
யற்றுக்கு மனஞ்சற்றும் கெளியாமல் (ஒளியாமல்)
நிட்டையில் நின்றறி - குறவா !

வஞ்சியே ரஞ்சிதக் கொஞ்சுங் கிளியாளே
மாணிக்க புத்தி வடிவே - இனி
அஞ்சாதே பஞ்சாட்சரத்தினி லா(காயத்தில்)ப்
புள்ளும் பிடிப்பேனே !

**குறவன் ஞானப் பறவைகள் வரவு கூறுதல்**

**விருத்தம்**

முந்தியால் மூல உச்சி (முதல்வனின் பதியாய்)த் தோன்று(ஞ்)
சிந்தையால் கசிந்து பார்க்கில் திருமலை யாவுஞ் (சென்றே)
வந்ததோர் ஞானப் புள்ளை வழிவழி முறையாய்ப் பார்த்து
தந்திரத் துடனே நின்ற த(ன்மை)தான் சாற்றுவேனே!

**சிந்து**

வருகுதையே - மெஞ்ஞானப்புள் வருகுதையே

வருகு தையே சமையமீ ராறையும்
வண்மையுடன் பார்த்துத் தண்மைய தூகவே
தூரியா தீதக் குளத்தி லிரங்கிச்
சுருதி நடுவய லூடே குதித்தும் - வருகு

ஆறாறு சக்(கி)ர(வா)ளப் (பு)ள்ளை யேத்தியே
(அ)ந்தக் கரணத் தாலுவையும் பத்தியே
பேறாகப் பேரின்ப வெள்)ளம் பெருகும்

பெரிய கருணைக் குளக்கரை யேரியே – வருகு

மு(ப்பா)ழ்க் குளத்தையும் தாவிப் பறந்தந்த
மோனந்த மாகிய தானந்தப் புள்ளது
கற்பூர (தீ)பக் குளத்தினில் மேயக்
கா(வெளி யோ)டும் பர(வெளி தன்னிலே – வருகு

மு(க்) கோ(ணத் தின்) கெழுத் திமீனைக் கொத்தி
விக்காமல் கக்காமல் கிக்கிக்கி யென்ன)வே
முக்கோண வட்டக் குளத்தி லிரங்கி
முங்கிமுங் கியிரை (வா)ங்கி(க்) (கொ)ண்டு வருகு

தாதுக்கள் ளாகிய வக்காவுங் கொக்காவுந்
தா(ராவு) மன்(றிலும்) உள்ளானும் நாரையும்
பேதிக்க நீதிக் குளத்தி லிரங்கி (ப்)
(பின்)னுமுன்னும் பார்த்துத் தன்னந் தனியாக – வருகு

மூவருடன் கொங்கண மூர்த்தியும் மச்ச
முனியும் (பி)டித்துத் துலையாத பட்சிச்
சாலையறி வா(கி) வயலுக்குள் மேயவே
தாவித்தாவி மெள்ளக் கூவிக்கூவிக்கொண்டு – வருகு

(அ)ஞ்சுபஞ் சுப்பட்சி குஞ்சுக் கிரைதேடி
(ஆனந்த)க் காடுடே[6] தானந்த மாகவே
மின் சொ(ல்லு) மீவு (மி)றக்கமு (மி)ல்லா (து)
வஞ்சகர் தன்னையே குஞ்சு(க்கி) ரையாக - வருகு

---

[6] காலூடே என்றுளது.

அகார உகார மகாரம தாகிய
அந்தரக் குருகினம் தன்னு(டன்) கூடிச்
சிகார வகார யகாரம தாகியே
செங்கால் நாரையும் சேரத்தி ரண்டின்று – வருகு

மும்மல மாகிய திட்டுக்கு ளம்விட்டு
முச்சுட ராகிய கா(ணி)யுந் தாவியே
நிர்மல மான பேரின்பக் குளத்தில்
நிட்டைக்குள் மேயவே யெ(ட்டியே) பார்த்து - வருகு

உந்திக் கமலத்து ஓங்காரக் குளத்தினில்
ஓமென்று (சொல்லி ) முன்னியுன் னியுன்னித்
தந்தைக்கு முன்னே மகன் பிறந் தானென்று
தானந்த (மோனந்த மா)னந்த மாகவே – வருகு

தன்னை யறிந்த பேர்(களுக் கெல்லா(ந்)
(தா)விப் பிடிக்கின்ற ஞானந்தப் புள்ளது
என்னை (யறி)வித் (தென)க்கருள் (செய்ய)
எ(ழு)தியுங் காட்டாத (இ)ந்திர சாலம்போல் – வருகு

செந்தூர்க் கந்தனை சேவித்த பேர்க்)கெல்லாம்
மந்திரங் காசித்துச்[2] செல்வமுண்டாகும்
அந்த வி(த)ம (றி) (வால)ருள் சி(வ)மாற்(று)ம்
அத்துவி தம்போ(ல்) நிருத்தமிட் டுக்கொண்டு - வருகு

**குறவன் உரத்துப் பேசாதிருக்கக் கூறுதல்**

**விருத்தம்**

(அரி)மருக(ன்) திருமுருகன் குமரகுஞ் சரவணர்மேல் அன்பு கூர்ந்து
பரிபுர(பொ)ற் சரணமலர் சிரந்தனில் கரங்.தவிக்கும் பான்மை யோர்க்குங்
கரிமுகவ ரருளுதவும் திரிபுரையும் பொருளுதவும் கருத்துண் டாகும்
(அரியயனுங்) காணறியா (து)ரியாதீதம் ம(ற்)று நிற்கும்[3] நிலையது சொல்வாம் !

-------

[2] ரனறமுதவும் என்றுளது.

[3] நிலையெவடமவடஞ்சொல்வாய் என்றுளது.

**சிந்து**

கெம்பாதடையே பொறுபொறு - கென்பாதடையே
சம்பட்டிக் குட்டிரங்கி ............ ........
................ .. ..... விட்டு மேலே வருகுது
சிம்பாமல் போகாமல் தேறித் தேறிச்
சிவா(ய நமவெ)ன்ற அட்சரத் தூடுறில் - கெம்பா

அந்தாதி யந்தக் குளங்கரை யேறி
ஆதியா (னாதியா)ன வயலுள் ளி (தோ)வருகுது

சுந்தர மான சுடரி ரண்டு (மாய்)
(சுத்தம தான சுகந்த)வெ ளிக்குள்ளே – கெம்பா

ஆங்காரக் காடெல்லாம் மேய்ந்திரை தேடி
அனு(பூ)தி யான[1] குளங்கரை யேறி
நீங்காக் கருணை மடை வழி யாய்வந்து
ஓங்காரச் செய்யுக்குள் பாங்காக (மே)யுது – கெம்பா

அந்தர மான குளந்தனை நாடியே
ஆறானை யுங்கடந் தேறியேறி (யோடி)
உந்தாம லுந்து மனந் தெய்வ(ச்) சந்ததம்
உந்து பரப்பிரம(ம்) பற்றிட வருகுது – கெம்பா

வேதாந்த சித்தாந்த மெனுங்கவ சம்விட்டு
விந்து நாதமெனும் காலன் கரைவழி
சூதாந்த மான வெளிக்குள் வருகுது
சும்மா இருந்து சுகம் பெற லாமே – கெம்பா

அஞ்சுபஞ் சமாயப் பிறவியி தாதிய
அந்தப் பெரிய சுறாவை விழுங்கியே
அஞ்(செழுத் தாறெழு)த் தெட்டெழுத் தாயொன்றாய்
அந்த வயலில் பதுங்கியிருக்குது – கெம்பா

மண்டல மூன்றையும் ஒவ்வொன்றாய்த் தாவி
மருவியே சாக்க(ரஞ் சுசுத்தி) வாலினில்க்
கண்டதும் கேட்டதுங் கொண்டது மல்லாது
காரணச் செய்யுக்குள் பூரண மாகுது – கெம்பா

கருவி கரணமாங் கோரைக்குள் மேய்ந்தந்த
காட்டைத் திறந்தொளி பூட்டைத் திறந்து
உருவிய தூங்காரத் துள்ளொளிக் குள்ளே
உபாய சிவாய நமாவென்று மேயுது. - கெம்பா

வரும்வழி போம்வழி மாயாவ ழிதன்னை
வாலாலுங் காலாலுங் கீழாலு ழப்பியே
உரும்வழி யில்லாத ஓமாம்[2] வவுட்
ஊமை யெழுத்துக்குப் பேசுமெ ழுத்தது - கெம்பா

-------

[1] யானா என்றுள்ளது. [2] – ?

உகார வடிவாய்ப் பிரபஞ்சஞ் சூழ்ந்திடும்
ஓங்காரக் கார்கடான்[3] பாங்(கான) வயலுக்குள்
நகாரமு மடியச் சிகாரமு நடுவாக
நாடித்தேடித்தேடி கூடிவருகுது - கெம்பா

[3]. கார்க்கோடன்

பதியு மனாதி பசுவு மனாதி
பார்த்திருக் குமந்த ஞானந்தப் புள்ளது
(வி)தியுண் டா(னா)ல் வித்தையுண் டாமென்றே
சிவ (ந)ம வென (ப்புக்குத்)[1] தாண்டிப் பறவாமல் - கெம்பா

---

[1] இதன் பின் காண்போனது என்ற சீர் மிகுதியாக உள்ளது

பேதா பேதச் சமையமே யெல்லாம்
பிச்சுப் பிளந்து தான் சிச்சிச்சி யென்னவே
சூதாக வானந்தி சொன்ன உபதேசம்
மீதாக மான வெளிக்குள் ளொளிக்குது – கெம்பா

எட்டு மிரண்டு மிசைந்து திருத்தியே
யேற்ற மிரக்க மறிவான வயலுக்குள்
வட்டமிட்டாடிய சிவலிங்கப் புள்ளும்
மருவி வருகுது ஒருவரும் பேசாதே – கெம்பா 25

**குறவன், மெஞ்ஞானப்புள் போகாதிருத்தலைக் கூறுதல்**

**விருத்தம்**

சரவண பவனெனத் தாண்டி(ப்) போ(ம்)வினை
சரவண பவனெனத் தழைக்கு மப்பொருள்
சரவண பவனெனச் சகலமும் செ(ய)மா(ம்)
சரவண பவ(னலாற்) றானொன்று மில்லையே! 26

**சிந்து**

போகாமலையே - மெஞ்ஞானப்புள் - போகாமலையே
போகாம லையேயென் னுள்ளத்தி னுள்ளே
பொருந்திய போதச் சிவானந்தப் புள்ளது

வாகாய் நடுவணை வட்டக் குளம்விட்டு
வஞ்சக(க்) காமக்கு ளத்துக்குள் மிஞ்சியே - போகா
மந்திரத் தாலும் வாகான (வஞ்சு)
பஞ்சாட் சாத்தி (னின் பன்றி வாலும்
எந்தவி தத்தாலு நான் பிடிக்கவேணும்
ஓதிய மாயைக்குள் தாறுமா றாயோடிப் - போகா

அருவு முருவு மரூபா ரூபமும்
ஆதி யந்தமுதல் விந்து நாதமான
திருமுரு கா அரி ஓம் நமஸ் தேயெனும்
செய்யுக்குள் ளேவந்து பையப் பதுங்குது - போகா

மும்மல முந்தித்து மூலச் சுழியின்
முளைத்தே[1] (யிருந்தென்) மயமும் (கடந்தே)
கம்ப முடிவி லென்மயந் தந்தென்னை
ரட்சித்த பட் சி தான் கற்சித்தாப் போலோடிப் போகா

----

[1] வரி பிறழ்ந்துள்ளது போலும்

ஆடியும் ஆவணி ஆன புரட்டாசியும்
தேடிய றிந்தவர் தெய்வத்தோ டொப்பாகும்
நாடியே பாதத்தைக் கூடி யே கொண்டு நீ
மூடிவை மூடிவை (யோடி)யே போகாமல் - போகா

கண்டத்தைக் கண்டு கருதி முடிந்தவர்
(பி)ண்டத்தில் வா(ரா)ப் பிறப்பிறப் புமில்லைத்
தொண்டர்க் கருளிய சூட்சத்தில் சூட்சத்தைச்
சொன்னாலும் சும்மா இருந்தாலுங் குற்றம் - யோகா

எட்டிப் பிடிக்கிறாப் போலே யிருக்கும்
எட்டாம லும் எட்டித் தட்டாமல் (நிற்)கும்
கட்டுமெட் டாகவே வெட்ட வெளிக்குள்ளே
திட்டப் படுத்திக் க(க்)கவிட் டுவிடாதே- போகா

மாயப் பிரபஞ்சக் காட்டைக் கடந்து
மனோாலைய மான வெளிக்குள் வருகுது
ஓயாமல்ச் சாயாமல் நேராகவே நில்லு
உன்னையுந் தெ(ட்டிப்போட் டெ (ன்னையுந்) தெட்டியே - போகா

இடைபிங் கலையெனு (மி)ரண்டுக்கு மெட்டாமல்
(ஏ)காந்த மாக யிருக்குமந் தப்பட்சி
உடலு முயி (ரு)க்குள் (நா) தாந்த சற்குரு
ஓமென்று சொன்னார் நீ யாமென்ற தைத்தப்பிப் போகா

முத்திக்கு வித்தாய் முளைத்த முதல்வன்
முருகன் குமரன் கடம்ப (னரு)ளைச்
சுத்திச் சுத்திவெகு தூரத்தி லோடாதே
பத்தி பத்திநீ பதைப்பற் றிருந்திடப் - போகா

**குறவன் கண்ணி கொண்டுவரச் சொல்லுதல்**

**கலித்துறை**

மந்திர மூர்த்தி சிதம்பர தாண்ட (வத் தான்) க (ரு)ணை (ச்)
சுந்தர மூர்த்தி தொழுங்குரு நாதன் துலங்கவந்த
(கந்தர மாறும கரமுமீ ராறுடைக் கந்தனெந்தன்
(சிந்தையி)ல் மே(வுஞ் சிவஞானப்) புள்ளைத் தெரிசிப்பேனே ! 28

**சிந்து**

கண்ணி கொண்டுவாடா - மனோகரக்
கண்ணி கொண்டுவாடா.

கண்ணி கொண்டுவா குருகினத் தூடே
(க)லந்து(கா ணப்பறந்து) பதுங்கி வருகுது
கண்ணி லொளியுங் கருத்தி னொளியுங்
............... திந்து பரந்த – கண்ணி

ஆதி யந்தத் துறை தன்னைக் கடந்து
(அகார நகார ) வயலுக்குள் மேயுது
வேதப் பரம்பொரு ளா (தி)ப் பட்சிக்கு
(வேலன்) முரு(கக்) கு(ரு) உபதேசித்த – கண்ணி

கருவி கரணக் குளத்தைப் பி(ரிந்ததில்)
(கா)ர[1] (ண) மாவிந்து காலின் வழியே
உருவரு வில்லாத ஞா(னமாம் புள்ள)து
ஓடி வருகுது கூடித் திருந்தின – கண்ணி

--------

[1] ள என்றுளது

எட்டு மிரண்டு (மிருந்தவிட)த்தை
எட்டியெட் டிப்பார்த்துக் கிட்ட நின்று மெள்ள
நட்ட நடு (வான சிட்டதனைக்) குறித்து
நாடித் திருத்தியே கூடிப் பிடிக்கின்ற – கண்ணி

அஞ்(சுடன் மூ)ன்று எட்டுக் கரமான
அனாதி மந்திர (வ)யலூடே யிரங்கி
(பஞ்சாட் சரப்)பேறு கொடுக்கின்ற பட்சி
விரைந்து வருகுது (பாந்து பிடிக்கின்ற) – கண்ணி

அந்தக் கரணமு மாறுச மையமு
(அப்பாழு மப்பாழு முப்பாழுந்) தாவியென்
சிந்தைக்குள் நின்று சிவாய நமவென்று
தப்பாம (லே நின்று செக்)காரு மருவுருங் - கண்ணி

வாக்கு மனமுங் கடந்த மனோ(ன்மணி)
வாசி (யது) வென்ன வளருந்தன்[1] மனோலையும்
போக்கும் வரவும் இரவும் பகலும்
(புரம்பு மு)ள்ளுமா யிருக்கின்ற புள்ளுக்கு -- கண்ணி

-----

[1] வமருந்தன் என்றுளது

தேவாதி தேவர்கள் (தேடரி தாகிய)
சேட்டிவித் தப்பர மாகிய செய்யுக்குள்
(சீவாதா ரங்கண்டு சிந்தனைக் குள் நின்று)
தேறி யிருக்குது கூறரி தாகிய – கண்ணி

கம்பத்தே (தோன்றிய) கடையெழுத் தொன்றாய்க்
கருதி முடிந்த சுருதி வயலுக்குள்
(கும்பத்தின் பதுன்ப) மற்ற பெரும்மாட்சி
யிருக்குங் கருத்தைத் திருத்திப் பொரு(ந்)தின - கண்ணி

விந்துவும் நாதமு மேவுந் தலந்தனில்
சந்திர சூரியர் தங்கும் வயலுக்குள்
(இந்திர) னோலக்கம் போலவே பட்சி
இருக்கு திருக்கு (தொருத்த ரறியாமல்) – கண்ணி

விட்டத்தில் முக்கோணஞ் சற்கோண மாயொரு
(வட்டத்)தில் (நூறு ................
திட்டைக்குள் ளேறியே யெட்டியெட் டிப்(பார்த்து)
(விட்டுப் பிரி(யாம லெட்டெழுத் தாகிய – கண்ணி

சாக்(கிரஞ் சொர்ப்பன நற்)சுழுத் திநிலை
தாண்டித் துரியா திதவ யலுக்குள்
(ஆக்கினை யாயிருந் தங்கங்)கே வருகுது
பாக்கியந் தானிது வாக்கிய மாகிய - கண்ணி

ஊ (னு ம)ரிவியு ...... றவரை
உச்சம்விட் டோடிப் பறந்து பதுங்கி
(மானுடம்) பாயும் மாகமாங் குளத்துக்குள்
ளிந்தா வருகுது (சுந்தர மாகிய) – கண்ணி

**குறவன், கண்ணியைத் திருத்தி வைத்தல்**

**விருத்தம்**

கோணாத மனோகரந் தானறிவி னோடுங்
கண்ணிதன்னைக் (கொடு)க்க வாங்கி
ஊணாம லூணியங்கென் றுத்திரத்தாலே
நிறுத்திநல் லுயரவே மேலே)ற்றிக்
காணாத காட்சியது கண்டார்க்குக்
கண்(ணொளியா)ன (கண்ணின் பாதம்)
பேணாத அறிவிலியோர்க் கெட்டாத
ஞானப்புள் பிடிப்பே னையே!

**சிந்து**

திருத்தி வைத்தேனே - கண்ணியைத்
திருத்திவைத்தானே

திருத்தி வைத்தேன் கருத்தினால் கட்டித்
திங்களுடன் கதிரிர(ண்டு ) மொ(ன்றாகப்)
(பொ(ருத்)துச் சுழியி லிருத்தி மறித்துப்
போகாம லேதிட (லேற்றி வளைந்து) – திருத்தி

ரேசக பூரகக் கண்ணி திருத்தி(னேன்)
(பூரக கும்பகத் தன்னுடன் கூட்டி

ஈசன ருளாலே பாசத்தை நீ(க்கியே)
வினை(யைக் களைந்தே யறிவி (னா லூனறித் - திருத்தி

ஓடிப் பரந்து போகாம லொ துக்கி
(உல)வு மா(ளவு மொன்றாக யிணங்கிக்
கூடிய குண்டலித் தா(ளை)த் திறந்து
கு(ம்பி)த்து அங்கென் சிங்கென யூன்றித்- திருத்தி

கடைவழி ஓடிக் (கழிந்து போகாம)ல்க்
கண்வாய் வளிபையப் பைய நடத்தித்
திட(ந்தனி லேற்றித் தடமா) யிருந்தந்தச்
செய்யுக்குள் ளேசூட்சப் பையு(க்குள் ளேயூன்றித் - திருத்தி

அத்துவி தம்பேர லிருக்கின்ற பட்சி
அதற்கு மறியா த(திசய மானது)
உத்த குருகின(த்) தூடே வருகுது
ஓடிப் போகாம லங்கென்று பரித்துத் - திருத்தி

காலுரெண் டாகும் நிறமுங் கருப்பு
கலைகள் அறுபத்து நாலுடன் (கூ)டு(ம்)
நாலு சிறகுண்டு பரந்து போகா)ம(ல்)
ரகசிய மாக நடுத்தானம் நோக்கித் - திருத்தி

காலன் வழியோடிப் (போகாமல் கண்வாய்)
(கழிந்தவ)ளி பையப் பைய நடத்தியே
மேலாக வேவிந்து நாதாந்தக் குப்பிக்குள்
மீதான மான வெளியொளிக் கேசென்று – திருத்தி

(அகார உகாரஞ்)சே ரினத்திலஞ் செழுத்தாதி
அந்த முதலன் பத்தோ ரெழுத்தாய்ச்
சகாரம் நடுவணை யாய்முக மைந்தாய்
அஞ்செழுத் துஞ்சிவ பாதந் துணையென்று – திருத்தி 31

**குறவன் ஞானப்புள்ளைச் சுற்றி வளைத்தல்**

**கலித்துறை**

தீராத வல்வினை தீர்க்குஞ் செந்தூரன் திருச்சரணம்
ஆரா கிலும் புகழ் தேற்றின பேருக் கதிசயங்கேள்

ஓரா யிரங்கெதி யுண்டாமீ ராயிர யோகமுண்டாம்
சேராத செம்பொன்னுஞ் சேருமென் னாளுஞ் சிவபதமே! 32

**சிந்து**

சுத்திவாடையே- கலையாதே--சுத்திவாடையே
சுத்திவா டையே நீ ................
தூரத்தி லோடிப் பறந்து போகாமல்
நித்திய மா(ன சிவயோகக்) கண்ணிக்குள்
நேரே வருகுது சீரைப்பார்த் துப்பார்த்துச் - சுத்தி

எங்கும் நிறைந்த பர மானந் தப்பொருள்
(ஏகாட்) சரமாய் (இலங்குந் த)லத்தினில்
அங்கென்று வைத்திடுங் கண்ணிக ளேவேறே
(அசைந்து வருகு) மதிசயம் பார்த்துச் - சுத்தி

தலையுங் கழுத்து மூடலு ... ... ... ...
.............. நடுவாசி முன்வைத்து
அலையுங் கடல்போல் மனமும் மதைப்பற்றி
(ய)சையாம லேயுள் ளடங்கு மதைப்பார்த்து – சுத்தி

ஆ(ணுவ) மத்தி(க்கு) மந்தச் சுழி திறந்
தப்பா லிடைவிட. மாகை ய(ம)த்திக்
காணு(ங் கடலினைக்) காமியந் தானென்று
காட்சி(யா யுன்றன்) க(ண்ணியை வைத்த)ங்கே – சுத்தி

ஓடுங் கலைகளே ரேசக மாகுமுன்
பு(குந்த) கலைகளே பூரக மாகும்
கூடுகின் றதுரை கும்பத்துக் குள்ளே
குலாவிக் (குலாவிக்) குலாவி வருகுது – சுத்தி

இடம்வலம் சுத்தி யாள (வே வ)ந்து
சாதிக (ளா)கி லெழுந்தொனி கேட்குந்
திடமுடன் (நாட்டிய மாடிய) கூறது
சிவயோகக் கண்ணிக்குள் ளேவார தைப்பார்த்து – சுத்தி

மூலா தாரத்தின் மேருவைப் பற்றி
மூண்டெழு கன்னியை (காலா) லெழுப்பி
சால மனமங்கே வைத்துப் பார்க்கில்

சீவ னாகிய சற்குரு பாதத்தைச் - சுத்தி

வெட்டு ..... ..... ..... ....த்து
மேனியுந் தன்னிற மாக்கு மதுபோலக்
கட்டுப் படாதசுத்த ..... ..... .... ......ரத்தில்
காலங் கழிந்துபோங் காயம் சித்தியாகும் - சுத்தி

**குறவன் ஞானப்புள்ளைப் பிடித்தல்**

**கலித்துறை**

சிவஞான தேசிகன் செந்தூர் முருகன் (திருச்சரணம்)
(ப)வமேவி யன்புங் கருணையுங் கூர்ந்து தினம் பிடித்தால் [1]
(அவமான) வல்லிருள் நீங்கும் பெரிதும்[2] பரியமுண்டாம்
ந(வலோக) வேதமுந் தன்வச மாகி நடஞ்செய்யுமே ! 34

---

[1] தான் படித்தால் என்றுளது.

[2] பெரிமாம் ஆடி என்றுளது.

**சிந்து**

பிடித்துக் கொண்டேனே - மெஞ்ஞானப்புள்
பிடித்துக் கொண்டேனே.

பிடித்துக் கொண்டேன் கருத்தி லிருத்திப்
பேசாம லேமனங் கூசாம லென்றும்
நடித்தபொற் சரணம் படித்துப் படித்து
வடித்தவர்க் கெட்டாம லாடின கண்ணியைப் - பிடித்து

மாலய னுக்கரி தாகிய வப்பொருள்
நாலுக்கு மாருக்[1] கும்பத்து நடுவாக
ஆலய மாக வமர்ந்தே யிருக்கின்ற
மேலாம் பரம்பொருள் மெஞ்ஞான தீபத்தைப் - பிடித்து

மன்னாமல் மன்னும் எழுத்தையுங் கூட்டி
வாய்க்க வருளை எழுத்தையுஞ் சேர்த்தி
உன்னாம லுன்னும் உயிரெழுத் தாக
ஓம் நமோ நாராய ணாநமஸ் தேயென்று – பிடித்து

இருவினை யற்ற விடத்தையுங் காட்டி .
என்னைக்கொண் டேயவன் தன்னைத்தந் தாடி
அருபா ரூப சொரூபா னந்த
மானதன் பிறகே[2] ஆடி ஆடி[3] வைத்துப் - பிடித்து

தன்பத் தொன்பத சீர்பாத மாகித்
தானவ னாமம் தவழும் அதுவாகித்
துன்ப மலமற்ற இன்பம் விளையும்
(அம்பலத் தேயசைந்) தாடிய பாதத்தைப் – பிடித்து

அரனு மரியு மயனுமந் தப்பெரு
வடியு முடியும் நடுவாயென் னுள்ளத்தில்
திறம்பெற வைத்த அடித்தாள மத்தளம்
துன்ப மலந்தள்ளி இன்பம் ஏற்கவே – பிடித்து

மூன்று விதமாகி முப்பொரு ளும்யாகி
முச்சுட ரும்மாகி மும்முத(லும்மா)கி
நான்றபாம் பின்வாயில் நடுவி லெழுந்த
(நாதாந்தத் துட்பொருள் நாடும்) வினோதப்புள் - பிடித்து

அக்கர வுங்கொன்(றை யம்புலி யுஞ்சூடித்)
(திக்கெனு) மெட்டும் சிறந்தொளி வீசிய
சுக்கிர (தீ) பச் (சுகச்சொரூ பானந்த)
(நி)ஷ்க்(கள மா)ய்நெஞ்சி லுக்கிரம தாகவே -பிடித்து

-----

[1] மாறுக் எனல் பொருந்தும் [2] பிரவே என்றுளது
[3] ஆரி ஆடி என்றுளது

எட்டுதிசையும் பதினாறு கோணமும்
முட்டப் படிந்து முளைத்(தெழுஞ் சோதியைப்)
பட்டப் பகலான வெட்ட வெளிதனில்
திட்டப் படுத்தியே (விட்டுப் பிரியாமல் ) – பிடித்து

யார்க்குந் தெரியாத அத்து(வி தப்பொருள்)
(ஆதியு மந்தம்) அனாதியு மாய்நின்று
வாக்கு மனதுக்குங் காயத்து(க் கெட்டாமல்)

நரசிங்க யோக ஞானப் புள்ளதைப் – பிடித்து

ஞானமு நேயமுஞ் (ஞாதுரு) வுங்கூடி
நாடி யிருந்தது மூடியிருந்தது
ஆனந்த மான அகர்தீத[1] வண்மையை
அரிஓம் நமாவென்ற (அட்சரத் துக்)குள்ளே – பிடித்து

குருவென வந்தார் குணமாய் (நின்றார்)
(திருநீறு) சாற்றிச் செவியருள் செப்பி
அருள்சிவ மாகியே (தன்னையுங் காட்டி )
(யசை)யாம லேவைத்த வதிசயந் தலையெட்டிப் - பிடித்து

தன்னைத்த(ந் தென்னையும்) தடுத்தாண்ட சற்குரு
தானென்று நானென்று (பே த)மில் லாமலே
என்னை யறிவித் தெனக்கருள் செய்ய
(இன்)னதென்று சொல்ல வெல்லைக் கடங்காது - பிடித்து

மன்னும் (மன்றுளே பேறும்) வளியான
வகுத்த குதம்பைப் பகுத்தறி வாகவே
கண்ணி லொளியைக் (கருத்தறி) வாய்வைத்து
காட்சி யாகவந்த (சூட்சுமத் தாலே) - பிடித்து

ஆறாறு முப்பத் தாறு கருவியும்
ஐந்து மலமும் (வஸ்துவாய் நிற்கும் )
வீறாம் பரம்பொருள் மேலான உச்சி
விளங்கிய தீபம் முழங்க(நின் றாடவே) - பிடித்து

அறுபது மு(ப்)பது ஆரையுந்[2] தாண்டி
ஆறா தார முடிவி லிருந்து
பருபதத் துச்சி நடுவணை மீதினில்
பா(ங்குட னே)வளர்ந் தோங்கிய பேறதைப்  - பிடித்து

------

[1]. - ?        [2]. ஆறையும் தாண்டி எனல் வேண்டும்

ஆணுவ மாகிய (மாய்கையைப் போற்றியே)
அந்தப் பதிபசு பாசமும் நீக்கியே
நாணம்பு வில்லும்போ லென துள்ளத் தினுள்ளம்
நாடின யெல்லையை தாடியிட் டுக்கொண்டு - பிடித்து

விட்ட எழுத்தை விடாத எழுத்துடன்
மேலாம் வெளியில் விய(மாக) யேற்றியே
வட்ட யெழுத்தாலே கட்டி மரித்து
வைத்தகண் ணிக்குள்ளே சிக்கிய புள்ளதைப்- பிடித்து

சொல்லப் படாத சுகமாம் பொருளைச்
சூட்சாதி சூட்சச் சுருதி முடிவினில்
கல்லப் படாதது (காணப் படா)தது
காணாமல் காணவே கண்ட அதிசயம் – பிடித்து

(ஆணல்ல) பெண்ணல்ல அலியது[1] தானல்ல
அருவல்ல உருவல்ல (அண்டரண் டமல்ல)
காணும் பொருளல்ல காணாப் பொருளல்ல
காரணக் காட்சியாஞ் (சூட்சும) சூட்சத்தைப் – பிடித்து

-----

[1] அதியது என்றுளது.

**வாழ்த்து**

விந்து நா தம்வாழி! வேதப்பொ ருள்வாழி!
(சந்)திரர் சூரியர் தழைத்தென்னாளும் வாழி
எந்தன் குருவாழி! இந்தலோ கம்வாழி!
சங்கக்குற வஞ்சியுங் கற்பகா லம்வாழி!- பிடித்து

பொன்னாக ரச்சடை மேவியே வாழும்
குருச்சென்ன வீரய்யர் பாதத்தின் முடிவாழி!
பன்னு தமிழ்க்குதவும் பரிமே லழகரென்பார்
(பாரினில் மன்னிச்) சுகமாக வாழி – பிடித்து 35

**வாழ்த்து**

**கலித்துறை**

என்குரு வாகிய ……………………………………. டியைப்
பொன்குரு வாமென்று போற்றி நின் றிங்கே விளங்கி நிற்கும்
(தன்) குரு வாகும் பரிமே லழகர் தரணிதன்னில்
இன்புற் (றியம்பு முப)தேசம் நாளு மிலங்கிடவே! 36

**விருத்தம்**

குமர குருபர னோதுங் (குறவஞ்சிக்) கோர்வை தன்னைச்
சமரச மாகப் படிப்பவர் கேட்பவர் தான் முழுதும்
அமரர்கள் போற்றுங் குமரேசர்க் கென்றும்
(தமருடன்) வாழ்பவர் சாயுச் சியபதஞ் சார்பவரே!

**குருவே துணை**

**(குமரேசர் பேரில் ஞானக்) குறவஞ்சி எழுதி முடிந்தது முற்றும்.**

கர வருடம் தை - மீ .................... வாரமும் ரேவதி நட்சத்திரமும் பஞ்சமி திதியும்
..... .............. நாளில் எழுதினது.
இந்த ஏடு சின்னாறுபாளையம் பெரிய ................ டு.
ஏதாமொருவன் எடுத்தால் படித்துப் பார்த்துக் கொ(டுத்துவிடவும்.)
------------

## ஞானக் குறவஞ்சி
## பகுதி -2

### காப்பு

அறிந்திருப் பரமு மாண்டொன்
றனுபவிக் கதிப் னென்னச்
சரவண பவனாஞ் செந்தில்
வேலவன் மீதி லிந்த
நற்சிவ ரூப மான
நாடகக் குறத்தைப் பாட
சிற்பர ரூபத் தாறக்
கருத்தது காப்புத் தானே! 1

பிர(ம)மு மலையா(ய்த் தோன்றி
பிரணவங் கொண்)டே நின்ற
சரமிரு பிறத்தை யாகத்
தற்பறச் (சரமா நித்தம்)
கரமென்னு மறிவைக் காட்டிக்
கையெனு (மெய்ப்பொருள்தான்)
பரமென விருந்த ஞானப்
பரகதிப் பேருண் டாமே! 2

### குறவன் தோற்றம்

குஞ்சரப்பொன்[1] னடிவணங்கி மன்னீ ரிட்டு
(க) மூலிக்குள் ளோ(ட) மிட்டுக் குறிக்கெட்டாத
தஞ்சமென்று கச்சைகட்டி அறிவாங் கண்ணி
தனையெடுத்துச் சகவாசி பூட்டிக் கட்டி
நெஞ்சிலிடை பிங்கலையா மிரண்டுந் தாக்கி
நினவென்னும் (அவ்)வளியால் நினவைப் பார்த்து
பஞ்சபட்சி யிறகணிந்து திருச்செந் தூர்க்குள்
பாண்டிமையக் குறவன் வந்து தோன்றினானே! 3

-----

[1] இதன் முன்னுள்ள பாடல் பின் 11 ஆம் பாடலாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

**சிந்து**

அறிய னோ நம சிவாய மென்னுஞ்
சத்தாதி யந்த மனா தியி லுண்ணு
நடுதறி யூடே தெரியாமல் தெரியுஞ்
செந்தூரில் நாட்டுக் குறவனும் நானே !

ஓகார மான நகார (மாகி)
(மகார யகார மாகியே நாளுஞ்)
சிகார வகார மகார மான
அனாதி நாட்டுக் குறவனும் நானே!

(நன்றான) ரூபம் (தருமவ) னியிலே
பாயும் நன்னாத ரூபவெ ளியினில்த்
தோயும் மோன ரூபம்வைத் ததிருச்
செந்தூர் நாட்டுக் குறவனும் நானே!

பஞ்ச காமப் புலாதியைத் தட்டி
பசுபதி பாச மூன்றையுங் கட்டி
அஞ்சினா லஞ்(சதுக் கப்பாலே நி)ன்று
அனாதி நாட்டுக் குறவனும் நானே!

தொம்மென் றாடிச் சுருதி முடிந்ததைச்
சொல்லாமல் (சொல்லி நின்றோடி யாடி)யும்
அம்மென் றோதிக் கடந்த அதீத
அனாதி நாட்டுக் குறவனும் நானே!

(அன்றான அப்பாலு) முப்பாழு மற்ற

ஆனந்த மோட்சஞ் சுழிமுனைக்குள்
நின்று (நிலைவிடும் நேர்த்தியாஞ் செந்தூர்)
(நன்றான நாட்டுக் குறவனும் நானே!

(மன்னு) மனமாய் கைத்திரோ தாயியு
மாய்கையு மாசில்லா வுண்மை தன்னை
என்னா ளுஞ்சுக சுத்த அதீத
சுருதி நாட்டுக் குறவனும் நானே!

சத்தி வட்ட மதுக்குள் நின் றாடித்
தானவ னென்னும் ஆனந்த மாடி
சுத்த வெட்ட வெளிக்குள் ளிருந்த
செந்தூர் நாட்டுக் குறவனும், நானே !

**குறவன் தன் சொந்தமலை கூறுதல்**

முந்தமலைக்[1] (குள்ளிருந்த) மோனமலை
முடிவி லிருந்த மூலமலை
அந்தமலைக் குள் (குறவ னாடிவந்த)
(ஆ)திமலை (வேதமலை சோதிமலை)
சந்தமலைக் குள் குறவன் (றனை)வந்து
தடுத்தாட் கொண்டனாள் முதலாய்ச்
சொந்தமலை யாஞ்சந்திர கிரி(யெனுங் )
(கந்த) மலை யெனக்குக் காணியையே !

---------

[1] இது, முதல் 3-வது எண்ணுள்ள செய்யுளாகும். இடங்கருதி ஈண்டு தரப்பட்டுள்ளது.

**குறவன் சிவபட்சி வருவதைக் கூறுதல்**

**விருத்தம்**

ஓ(ம்) சிவா யெ(ன்ற சுத்த ஓளியினில்) வெளியாய் நின்று
வாசிவா யென்ற மோன மலையிலே யிருந்த பட்சி
பேசிவா யென்ற (ரூபப்) பிரணவ குளத்தை நாடி
நீசிவா யென்ற ஞான நிலையிலே வருகு தையே! 13

**சிந்து**

வருகுதையே - சிவபட்சி – வருகுதையே

சுருதியி லக்குரு வைகிறா ரண்டடிச்
சக்கர வாளப்பு ளன்றி(யே நாடி)
பிரணவக் குளத்தி லிரங்கி (யிரங்கி)
அங்கென்ற பத்திலே உங்கென்ற வித்திலே – வருகு

முக்கோணச் சிம்பு ளண்டர(ண்ட பட்)சி
மூலக் குளத்துக்கு ஞால உருக்கொண்டு
சற்கோணம் விட்டது வில் புருவம்நடுச்
சத்தி சிவபட்சி சுத்த (வெளியி)லே – வருகு

எட்டெட் டறுபத்து நாலு காரணத்
திறைக்கு முறைக்கு மடாங்காமல் நின்றது
வட்ட அனாக (தத் திட்டுக்குள் ளே) மெய்
எட்டியெட் டிப்பார்த்து நெஷ்டைக்குள் ளேயதோ- வருகு

முன்னும் பின்னும் நடுவெனுந் (தலத்திலே)
மூல முதலென நின்ற சிவபட்சி
உன்னு மறிவிலே உன்னாம லுன்னியே
(ஓமென்) றிறைதேடி (ஓங்கார வானிலே) – வருகு 14

**குறவன் பேசாதிருக்குமாறு கூறுதல்**

**கலித்துறை**

கருதி முடித்த பரவெளி தன்னில் க(ருவலங்கொ)ண்
டிருதி முடிந்த இடந்தனி லேயிருப் பானபட்சி
பருதி முடிந்த பதிதனில் மேயப் பதனமென்று
சுருதி முடிந்ததைக் கெம்பாதே யென்றினிச் சொல்லுவனே ! 15

**சிந்து**

கெம்பா தடையே - பொறு பொறு கெம்பாதடையே!

கெம்பாத டையே அம்பர்செங் காலி
கீழு மேலுநடுக் கேசரந் தன்னில்
(தம்)படிக் குட்டத்தில் வட்டத்தி லேநடுத்
தானத்தில் மேயிது கானத்தில் பாயாமல் – கெம்பா

முப்பாழுக் கப்பால் முடிந்த தலத்திலே
மூலத்தி லேலயக் காலத்திலே மேய்ந்தது
அப்பாழுக் கப்பால் பின்னப்பாலே போகாம

லாதியு மந்தமு மாக யிருக்குது – கெம்பா

வாசகம் வாசித்தாப் போலே சிவபட்சி
வந்தது வாசிவா யென்ற யிறைகொத்தி
ரேசக பூரக கும்பகந் தன்னிலே
நித்தமு மேயிது சத்திய மேசொன்னேன் – கெம்பா

ஆறாறு மாறுபத் தாறுக்குள் ளேமேய்ந்த
அந்த சிவபட்சி அன்பி லிருக்குது
பேறாக நாமும் பிடிக்க மனங்கொண்டோம்
பேசாமல் பேசிய பேரின்பப் பத்திலே – கெம்பா 16

**குறவன் சிவபட்சியைச் சுற்றி வளைத்தல்**

**விருத்தம்**

சுத்தவட்[1]டத்தில் நின்ற சதாசிவத்
தாண்டவ மென்றறி
ஒத்தவட் டத்தொளியா யொளிக்குள்ளே யொளிந்து நின்ற
உபாயத்தைப் பாரையே
சித்தவட் டத்தில் தோறாத வட்டமாய்ச் சிவந்தவட்டத்
தருள்மோன மாய்நின்ற
சுத்தவட்டத்தில் மேயிற பட்சியைச் சுற்றிவந்து
பிடிப்பது சூட்சமமே ! 17

----

1- இவ்வரியில் சீர் குறைந்துளது.

**சிந்து**

சுத்தி வாடையே! - கலையாத சுத்தி வாடையே

சுத்திவா டையே சித்தாதி சித்தெல்லாம்
தூரத்தி லேயோட்டத் தேறத்தி லேவந்து
அத்துவி தங்கொண் டொதுக்கிய சைவர்
அங்கனைக் கங்கனைக் கங்கனே தானே நீ – சுத்தி

பைங்கர மாறு பால்க்கர மேலும்[1]
பத்தக் கரம்பனி ரண்டும் பதினாறும்
ஐங்கர காலக் குளத்தி லிறங்கியே

ஆனந்த பட்சிக்குத் தானந்த பட்சிபோல் – சுத்தி

வஞ்சம லாதிப்பிர பஞ்சத்தி லேமேயும்
வாசிவா யென்ற சிவானந்தப் பட்சியைப்
பஞ்சப் புலாதிப் பறலை யளையொக்கப்
பத்தியென் றாக்கி பாதத்தில் கலந்து நீ - சுத்தி

ஆணுங் காமிய மாய்கையெ னும்பட்சிக்
கப்பா லிருக்குது அந்தச் சிவபட்சி
(கா)ணு நமக்கது காணு மறிவென்ற
கண்ணிக்குள் ளேவரும் புண்ணியம் பாத்தது – சுத்தி 18

-------

[1] மேழும் போலும்.

**சிவபட்சி போகாமல் குறவன் காத்தல்**

**கலித்துறை**

அந்தரந் தன்னி லமர்ந்திட்ட பட்சியை அன்பறிவா
மந்திரத் தாலழைத் தேன்கிட்ட வந்தது வந்தவுடன்
சிந்துரத் தாலுளத்[2] திலதமிட்டேன் செந்திலான் கொடுத்த
தந்திரத் தால்பட்சி போகாமலத் தானின்று சாதித்தேனே! 19

---

[2] தாலுணத் என்றுளது,

**சிந்து**

போகாமலையே!- சிவபட்சி - போகாமலையே !

போகாம லையேயென் னாகத்தி லாகம்
பொருந்துஞ் சிவபட்சி (போதமும்) வீணி
லேகாந்த மாக யிருக்க வசப்படு
மின்பக் குளம்விட்டுத் துன்பக் குளத்துக்குள் – போகா

மோட்சாதி மோட்சமாய் மோட்சமெ னுஞ்சிவ
மோனத்தி லேநடுத் தானத்தி லேயதி
சூட்சாதி சூட்சமாய் (சூழ்த்த) சிவபட்சி
தூரத்தி லேகாமல்ச் சாரத்தி லேயோடிப் - போகா

பாலரு பம்போலே யிறுக்கின பட்சி

(பத்துக்) கொன் றாகப் பழுத்துக் கொழுத்தது
கோலரூ பம்விட்டுத் தொனிரூபங் கொண்டொரு
சொட்டுப்போட் (டே நம்)மை விட்டுப்போட் டோடிப் – போகா

ஓமென்று உண்ணும் உண்ணாம லேயுண்ணும்
ஒளிக்குள் ளேவெட்ட வெளிக்குள் நமக்கது
ஆமென் றிருக்கிற பட்சியைப் பாருன்
அறியுக் கறிவென்ற வட்டத்தை விட்டப்பால்- போகா 20

**குறவன் சிவபட்சி இரை மேய்தலைக் கூறுதல்**

**கலித்துறை**

பையி லிருந்த பதமல(ர்)ப் பாண்டப் பதங்கமெனும்
பொய்யி லிருத்து புகுந்துகொண் டாடிப் பொருள் விளைந்த
செய்யி லிருந்து யிருதனை யொக்கச் செலுத்தியெந்தன்
மெய்யி லிருந்து விளையாடி யேபட்சி மேயிதய்யே! 21

**சிந்து**

மேயினுமையே - சிவபட்சி - மேயினுமையே !

மேயினு மையே தோயாமல் தோயும்
விறுமத்தி லேமெய்க் கிருமத்தி லேவிந்து
பாயாமல் பாயும் கண்ணிக்குள் ளேவரும்
பார்த்துக்கோ பட்சியுங் கூத்தாடிக் கூத்தாடி - மேயின

சொல்லுஞ் சுருதிக்கு மெட்டாமல் நின்று
தூராதி தூர அதிதூர மாகிய
அல்லும் பகலு மிரந்த தலத்திலே
ஆதியு மந்தமு மாக யிருந்தன்னா – மேயினு

ஊருங் கருணை யுளமாங் கருத்தை
உருக்கி மெஞ்ஞானத் துறவது வாகியே
ஆறு தலமும் அலைந்து) பறந்து
அதீதத்தி லேசுகா தீதத்தி லேயன்று – மேயினு 22

**குறவன் கண்ணி கொண்டுவரக் கூறுதல்**

**விருத்தம்**

கருக்கலை மூங்கில் தன்னைக் கண்ணிக்கா லாக்கி ஞான
எருக்கிலை நாரைக் கண்ணி யிணங்கவே முறுக்கிச் சில்லு
உருக்கலை நூ(லால்ச்) சுற்றி உரையற்ற கண்ணி கூட்டிக்
குருக்கலை (பட்)சிக் காகக் குற்றுவேன் பிடிப்பே னையே! 23

**சிந்து**

கண்ணி கொண்டுவாடா- அருளென்னுங்
கண்ணி கொண்டுவாடா

கண்ணி கொண்டுவா யெண்ணு மெழுத்துங்
கடந்த சிவபட்சி கைக்கு ளகப்படப்
புண்ணிய மான பயிரிலிருக்குது
பொட்டென ஓடிவா விட்டகு றையென்ற- கண்ணி

பம்பரம் போலே நடிக்கின்ற சூத்திரப்
பாவையை யாட்டு பரப்பிம்ம சூட்சமாய்
அம்பரக் குண்டலிக் குள்ளே சிவபட்சி
அன்னா யிருக்குது உண்ணாம லுன்னியே - கண்ணி

அல்லும் பகலு மிரந்த இடத்தில்
அதீத சுகாதீத மாகிய பட்சிக்குச்
சொல்லுஞ் சுருதி முடிவையுங் காட்டி
சூட்சாதி சூட்ச அதிசூட்ச மாகிய – கண்ணி

வாளற்று மண்ணற்று அம்பு தணலற்று
வாயவ தான மதமிதம் ரணடற்று
ஞானத்தில் நின்ற (சிவபட்சி தன்னை)
(தா)னான துவென்று பிடிக்க அறிவென்ற – கண்ணி 24

**குறவன் சிவபட்சி பிடித்ததைக் கூறுதல்**

**விருத்தம்**

இரத்தினி[1] துருவாய் நானென் றியங்குமிச் சின்னந் தன்னில்ச்
சரத்தினி லுருவாய் இன்பத் தலத்தினி லசைவில்லாமல்
பரத்தினி லுருவாம் ஞானப் பாத நான் பிடித்தே னையே! 25

---

[1] இதில் மூன்று வரிகளே உள்ளன.

**சிந்து**

பிடித்துக் கொண்டேனே! சிவபட்சி
பிடித்துக் கொண்டேனே!

பிடித்துக் கொண்டேனே நொடிக்குள் நொடியாய்
பின்னு முன்னும் நடுவென்னுந் தலத்திலே
நடிக்கும் பொற்பதங் கைக்குள்ளே சிக்கென்ன
நாதமும் விந்துவு மாண்டுமொன் றான தில் - பிடித்து

உச்சிக்குங் கீழேயுண் ணாவுக்கு மேல் வந்து
உன்னாம லுன்னி யிருக்கின்ற ஆனந்தப்
பட்சிக் கறிவென்ற கண்ணியை வைத்துப் பொற்
பாதத்தைப் பார்த்ததைச் சிக்கெனப் - பிடித்து

ஆதிக் கனாதியாய்த் தோன்றும் பரப்பிரம்ம
அம்பரப் பட்சியை யம்பர மாம்வட்ட
வீதிக்குள் வீதியாய் நின்ற நடுவணை
வெட்ட வெ(ளியி)லே திட்டமு டனே நான் – பிடித்து

உன்னப் படாதொன்றுஞ் செய்யப் படா(ததை)ப்
. ............ ... .......... ... ... ... ... ... ...
பன்னப் படாததைப் பேசப்ப டாததைப்
பேசாமல் பேசிய பேரின் பத்திலே – பிடித்து 26

**வாழ்த்து**

**விருத்தம்**

பிடிபடாப் பட்சி தன்னைப் பிடித்தபின் பிரமமானேன் !
அடிமுடி அறியாப்போதம் பரிவினா லறிந்தோர்வாழி!
வடிவது குறியாய் நின்ற மனோன்மணி மலர்த்தாள்வாழி!
குடிமுழு தடிமைகொண்ட குருபரன் வாழி தானே ! 27

குருபாதமே கெதி - பரதேவதை துணை.

**2-ம் பகுதி முற்றும்.**

-----------

## ஞானக் குறவஞ்சி
## பகுதி - 3

### காப்பு
### விருத்தம்

பொன்னுலகி லுள்ளோரைப் பொருத்தித் தவமறியா
மின்னுலகில் மெஞ்ஞானக் குறவஞ்சி மேலதாக
திண்ணமறத் தன்னிலுதிப் போரை நான் காணத்
தன்னினவில் தன்னறிவில் தரிப்பதே காப்பு!

### சிங்கன் சிங்கி தருக்கம்

ஆதிக்கு முன்னே அனாதி(யு) (மேதடி - சிங்கி) - அது
அந்தக் கருக்குழி முந்த யி(ரு)ளே - சிங்கா.

ஆதியு மென்ன தில் சோதியு மென்னடி - சிங்கி - அது
சோதி யுதிரத்தில் (சுக்கிலம் பாய்ந்ததே) - சிங்கா

ஆதியாய் வந்த அரும்பொரு ளென்னடி- சிங்கி - அது
ஆதி யுதிரத்தில் சோதி (யுருவடா)- சிங்கா.

ஆதி யனாதியுஞ் சோதியு மென்னடி- சிங்கி- அது
சோ தியி லாதி சொரூபா யெழுந்தது - சிங்கா,

சோதியி லாதி சொரூப (மா)ன தெப்படி - சிங்கி - அதில்
ஏதமா முப்பொரு ளொன்றாய் முடிந்தது - சிங்கா. 5

முப்பொரு ளென்றுநீ முன் சொன்ன தாரடி - சிங்கி - அது
அப்பனும் அன்னையும் ஆசையால் (ஒப்பினார்)- சிங்கா.

எப்படி யுலகத்தி லிப்படி யுருவா (னோம்)- சிங்கி - அது
அப்பனும் அன்னையும் ஒப்பிய தாலல்லோ-சிங்கா.

(ப)ராபரத்திலே பஞ்சவர்ணமேது - சிங்கி - அது
வேராகித் தூராகி விந்து நிறமடா - சிங்கா.

ஒண்ணுக்குள் ளைவர்க ளுண்டான தெப்படி - சிங்கி - அது
ஒன்றோடே ஒன்று ஒடுங்கி யிணைந்தது - சிங்கா.

மூலக் குகைக்குள்ளே முச்சுட ரென்னடி- சிங்கி - அது
முப்பொரு ளொன்றாய் முடிந்த நினவடா- சிங்கா

மூலக் குகையென்ற கோட்டைக் கரசாரு-சிங்கி - அது
கருநாகத் திலான (நடு) நிலை யல்லவோ - சிங்கா.

எவ்விடம் மூலக் கிழங்கு முளை(த்தது)- சிங்தி - அது
கண்ணிடை யான நடுநிலை யல்லவோ - சிங்கா.

முன்னே முளையாய் மு(ளைத்திட மெவ்விடம்- சிங்கி – அது)
(மூல) முனையிரு கண்ணித (மூல்லவோ) - சிங்கா,

பின்னை யுருவாய் முடிந்திட மெவ்விடம்- சிங்கி - அது
பெண் ணு மாணுமாகப் பிறந்த தலமடா - சிங்கா.

இந்த உடலுக்குள் வேரென்ன தூரென்ன - சிங்கி - அது
இந்த உடலுக்குள் வேறாகு மூலமே - சிங்கா.

இந்த உடலுக்குள் உயிர்வந்த தெப்படி - சிங்கி - அது
தொந்தி நடுக்குழி தொப்புள் வழியடா - சிங்கா.

இந்த உடலாக முன்னெங்கே யிருந்தது - சிங்கி - அது
அந்தர மாயடா மாக்கொடி நின்றது - சிங்கா.

மாக்கொடி யானதே மானிட ரேன் சொன்னார் - சிங்கி - அது
மட்டில (டங்காது) மாக்க(யம்) பாரடா - சிங்கா.

இந்த உடல்க்கனி எந்த உடல்க்கனி - சிங்தி - அது
முந்திய தொப்புளு மாக்கொடி யல்லவோ - சிங்கா.

எந்த வழியாலே வந்தோம் உலகிலே - சிங்கி - அது
எல்லாம் முடிந்த பொருள்வழி யாலே - சிங்கா.

ஆங்கார உடலுக்குள் அணிதா னென்னடி - சிங்கி - அது
ஓங்கார மூலத் துள்ளொளி யல்லவோ - சிங்கா.

ஆணி யாய்வந்த அமுதப்பொரு னென்னடி - சிங்கி - அது
தோணியாஞ் சற்குரு முதல் நாத மல்லவோ - சிங்கா.

இந்தப் பொருள்வந்த தெந்த வழியாலே - சிங்கி - அது
அந்தக் கதிர் மதி வந்த வழியடா- சிங்கா.

ஆசைகொண்டு நம்மை ஆட்டு(கி)ற தாரடி - சிங்கி- அது
அக்கினி வாய்வுநீ(ர் மண்ணுங் கலந்தது – சிங்கா)

ஆசார வாச லனுபோக மாரடி - சிங்கி - அது
அங்கம் பொருந்திய பங்கம னல்லவோ - சிங்கா. 25

தன்னை வணங்குந் தலமெது சொல்லடி - சிங்கி - அது
கண்ணிடை யான நடுநிலை யல்லவோ - சிங்கா.

என்ன விதமாகத் தன்னை வணங்கலாஞ் - சிங்கி - அது
இறையவன் தாய் தந்தை (யாகிய மார்க்கமாய்)- சிங்கா.

இறையை யறிகிற தெப்படிச் சொல்லடி - சிங்கி - அது
எங்கும் நின் றாடிய தன்னறி வாகுமே - சிங்கா.

தன்னை யறிகிற தலமெது சொல்லடி - சிங்கி - அது
ஒன்றைப்[1] பொருந்தி யொடுங்கி யிருப்பது - சிங்கா.

என்ன விதமாக ஒன்றைப்[2] பொருந்தலாஞ் - சிங்கி - அது
எல்லா மானது யிருளா யிருப்பதே - சிங்கா. 30

உச்சித வெள்ளை யுயிரெழுத் தென்னடி - சிங்கி - அது
நச்சர வாடு நடுநிலை யல்லவோ - சிங்கா.

நடுநிலை யானதை நாடுற தெப்படி - சிங்கி - அது
நாட்டமுந் தேட்டமும் ஒன்று படுத்தியே- சிங்கா.

தேட்டமு நாலுந்[3] திருந்துற தெப்படி - சிங்கி - அது
திருவைப் பொருந்தி யொருமித் திருப்பது - சிங்கா.

ஒருமித் திருக்கிற ஓரிட மெவ்விடம் - சிங்கி - அது
ஒன்றாய் இரவு பகலா யுதித்திடம் - சிங்கா.

இரவு பகலென்று என்னத்தைச் சொல்லலாஞ் - சிங்கி - அது

இரவு பகலிடை பிங்கலை வாசியே - சிங்கா. 35

இடைகலை பிங்கலை என்னத்தைச் சொல்லலாஞ் - சிங்கி - அது
இடைகலை சந்திரன் பிங்கலை சூரியன் - சிங்கா.

சந்திரன் சூரியன் ஒன்றான தெவ்விடம் - சிங்கி - அது
சகல கலையு(ம் பொருந்துஞ் சுழிமுனை) - சிங்கா.

என்னத்தி (லேபரம்) ஏறிநின் றாடுது - சிங்கி - அது
ஒண்ணுக்குள் வாசி நடம்புரிந் தாடுது - சிங்கா.

என்ன விதமாய் எடுத்து நின் றாடலாஞ் - சிங்கி - அது
ஏத்தமும் ஆத்தமும் இணங்கிநின் றாடலாஞ் - சிங்கா.

மாத்திப் பிடிக்கும் மருந்தென்ன சொல்லடி - சிங்கி -- அது
மாளாமல் மாண்டு மறைத்து இருப்பதே - சிங்கா. 40

அன்பத்தோ ரட்சா மறியச்சொன்(ன தா)ரடி - சிங்கி - அது
அஞ்சும் பொருந்திய ஆகாச வட்டமே - சிங்கா.

அஞ்செழுத் தானதை அறியச்சொன் னாரடி - சிங்கி - அது
அஞ்சும் பொருந்திய மாச்சுளி மூன்றுமே - சிங்கா.

(ப)த்தவி சேஷம்[4] இத்தனையார் சொன்னார் - சிங்கி - அது
புத்தியாய் **பீறு முகம்மது** சொன்னது - சிங்கா. 43

**ஆக கண்ணி 43 [5]**

----

[1]. யொன்னை என்றுளது, [2]. வொன்னை என்றுளது

[3]. நாளும் போலும் [4]. சௌம் என்றுளது [5]. 86 என்றுளது

## 3 - ம் பகுதி முற்றும்.

இதன் பின்னர் கீழ்க்கண்ட இரு பாடல்கள் காணப்படுகின்றன

பாராட்டுரா பாராட்டு பரகெதிக்கு வழிகேட்டு - அது
நூற்றிருபது சட்டு அன் னேரமுமதே ஒரு லோட்டு.

கம்பமற்ற பாற்கடலைக் கலங்கென்றால் கலங்குமோ?

இன்பமற்ற யோகிக்கு இருளுவந்து மூடுமோ?

**முற்றும்.**

---------